IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC.No.126/2024

Deposition of Witness PW1

Name : மெய்யப்பன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

15.02.2023 அன்று காலை வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு முதன் முதலில் தகவல் கிடைத்தது. நாங்கள் சென்றது ஈரோடு மரப்பாலம் பகுதி என்றால் சரிதான். திருவள்ளுவர் வீதியில் உள்ள பணிமனையைத்தான் நாங்கள் சென்று பார்த்தோம். மரப்பாலம் பகுதியில் புது வீதி, நடுவீதி, குறுக்கு வீதி சந்து, பூம்புகார் தெரு, மறைமலை அடிகளார் வீதி, குப்ப காட்டான் சந்து, சம்பந்தர் வீதி, பொற்கைப் பாண்டியன் வீதி, நாலடியார் வீதி, பழைய பூந்துறை ரோடு ஆகிய பகுதிகள்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.11.17 19:54:18 +0530

தான் உள்ளது என்றும் திருவள்ளுவர் வீதி என்ற பெயரில் வீதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரி தான் பணிமனையை அமைத்திருந்தார் என்று அங்குள்ள யாரை விசாரித்து குறிப்பிட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அங்கிருந்த பொது மக்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். எதிரி தான் பணிமனையை அமைத்திருந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் அருகில் இருந்தவர்கள் சொல்லி தான் தெரியும். சம்பவ இடத்திலிருந்து கட்சிக்கொடி, பேனர், கொடிமரம், ஆகியவற்றை கைப்பற்றி போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரி மரப்பாலம் பகுதி திமுக கவுன்சிலர் என்பதால் எனது உயர் அதிகாரிகள் கொடுத்த அரசியல் அழுத்தத்தின் பேரில் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு பணிமனைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. யாரோ ஒருவர் வைத்திருந்த பணிமனையை ஆய்வு செய்து விட்டு, எதிரி தான் அந்த பணிமனையை அமைத்திருந்தார் என்று யாரோ கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு போன் மூலம் நாங்கள் அறிவுறுத்தல் எதுவும் கொடுக்கவில்லை என்றும் நான் சொல்வது போல் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் என்னால் யாரை விசாரித்து தெரிந்து கொண்டோம் என்ற விவரத்தை கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.11.17 19:54:26 +0530